| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>பாரதிதாசன் | OS.23/2018 | 25.07.2022 |

**1முதல் 2 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மனு பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

எனது வீட்டின் வடபுற சுவருக்கும் வடக்கில் அந்த சுவரை ஒட்டி ஒரு சாக்கடை கிழமேலாக உள்ளது பற்றி எனது கிரைய பத்திரத்தில் (வா.சா.ஆ.1) ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. குமரேசன் கிரைய பத்திரத்திலும், (வா.சா.ஆ.2) முத்துசாமி செட்டியார் கிரைய பத்திரத்திலும் (வா.சா.ஆ.3) மேற்கண்ட சாக்கடை பற்றி அந்த பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. என் வீட்டு வடபுற சுவற்றிலிருந்து அதற்கும் வடக்கே உள்ள சந்திற்கும் செல்ல வாசற்படி உண்டு. கீழ்தளத்தில் ஜன்னல் இல்லை. மேல்தளத்தில் தான் உள்ளது. வடபுற சுவற்றில் கிழக்கிலிருந்து மேற்கே என் பகுதியிலிருந்து வடக்கில் உள்ள சந்திற்கு செல்ல வாசற்படி இல்லை என்றால் சரியல்ல. மேல்தளத்தில் உள்ள ஜன்னலுக்கு சன்சைடு 1991 ல் நான் வாங்கியபொழுதே இருந்தது. மேல்தளத்தில் உள்ள இரண்டு ஜன்னல்களுக்கு சன்சைடு எதுவும் கிடையாது என்றும், ஜன்னலை வெளியே திறப்பதற்கு கதவு எதுவும் இல்லை என்று சொன்னால் சன்சைடு இருந்தது ஜன்னலுக்கு கதவு உள்பக்கம் இருந்தது. மேல்தளத்தில் உள்ள செட் ஆனாது வழக்கிற்கு பின்னிட்டு தான் போட்டது. அந்த செட் போட்ட பொழுது தான் சன்சைடையும் போட்டேனா என்றால் இல்லை ஏற்கனவே இருந்த சன்சைடு பழுதானதால் மீண்டும் போட்டேன். எனது வழக்குரையில் மேல்தளத்தில் 2 ஜன்னல்கள் மற்றும்

சன்சைடு இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கில் எனக்கு சாதகமாக இடைக்கால தடை எதுவும் பிறப்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. இடைக்கால தடை எதுவும் இல்லாத நிலையில் பிரதிவாதிகள் பைப் லைன் போடக்கூடாது என்று உயர் அதிகாரிகளிடம் இடைக்கால தடை இருப்பதாகவும், அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் வழக்கு நிலுவையில் உள்ளதாக சொல்லிதான் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். இந்த வழக்கனாது வடபுற சுவற்றிற்கு வடக்கே 15 அடி மூலப்பத்திரத்தில் உள்ளதாக தான் வழக்கு. வழக்கு தாக்கல் செய்துள்ளதற்கும் தற்பொழுது 15 அடி உள்ளதாக சொல்வதும் பொய் என்றும், வடபுற சுவற்றை தாண்டி எனக்கு இடம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்னிட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக நஷ்ட ஈடு ஐந்து இலட்சம் தரவேண்டி அறிவிப்பை அனுப்பியுள்ளேன். அதற்கான காரணம் என்னவென்றால் முழுமையாக 15 அடியை அபகரித்து கொண்டதால் நஷ்ட ஈடு கேட்டுள்ளேன். எனது தரப்பு சாட்சி ராஜம்மாளும் அவரது மகள் செல்லம்மாளும் வடபுற சுவற்றிற்கு வடபுறத்தில் மேற்கு புறத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். நாளதுதேதி வரை ராஜம்மாள் மற்றும் அவரது மகள் பேரில் 15 அடி சம்மந்தமாக நான் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. வடபுற சுவற்றை ஒட்டியுள்ள சாக்கடையானது பிரதிவாதிகளுக்கு விற்றவர்களால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வடபுற சுவற்றை ஒட்டி இடம் சம்மந்தமாக அப்பாவுபிள்ளை மற்று ம் அவரது வாரிசுகள் மீது குமரேசனோ முத்துசாமி செட்டியாரோ வழக்கு எதுவும் தாக்கல் செய்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வெளியூர்காரர்கள் என்பதாலும் அவரது சொத்தை

அபகரிக்கே வண்டும் என்ற எண்ணத்துடன்  பொய்யான தகவல்களுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.